4 தினபூமி புதுச்சேரி 25.11.2012



புதுவை பல்கலைக்கழக வளாகத்தில் உள்ள கேந்திரியா வித்யாலயா பள்ளியில் கல்சுரல் விழா நடந்த்து. அப்போது நடந்த அசெம்பிளி நிகழ்ச்சியை ஓய்வு பெற்ற முதல்வர் சுப்பிரமணியன் பார்வையிட்ட காட்சி.

---

மாலை மலர் புதுச்சேரி 25-11-2012



பள்ளியில் உதவி ஆணையாளர் தலைமையிலான குழுவினர் ஆய்வு செய்த காட்சி.

# கேந்திரிய வித்யாலயாவில் அதிகாரிகள் ஆய்வு

புதுச்சேரி,நவ 25-

புதுவை பல்கலைக்கழக வளாகத்தில் உள்ள கேந்திரிய வித்யாலயாவில் சென்னை மண்டல உதவி ஆணையாளர் சுப்பிரமணியன் தலைமையிலான குழுவினர் ஆய்வு செய்தனர். இந்த குழுவில் ஓய்வு பெற்ற முதல்வர் சண்முகம், முதல்வர் சிவாஜி, துணை முதல்வர்கள் ருத்ரப்பசாமி, ஜானகி, தலைமையாசிரியர் ரவி மகாதேவன் ஆகியோர் இடம்பெற்று இருந்தனர். பள்ளியில் ஆசிரியர்கள் கல்வி கற்பிக்கும்முறை , அடிப்படை வசதிகள், ஆய்வுக் கூடம், மாணவர்கள் கல்வித்தரம், சுகாதாரம் போன்றவற்றை ஆய்வு செய்தனர். காலையில் நடந்த கடவுள் வாழ்த்து முதல் மாலையில் நடைபெற்ற மாணவர்கள் கலை நிகழ்ச்சி வரை ஆய்வு செய்த குழுவினர் தங்கள் ஆலோசனைகளை வழங்கினார்கள். மேலும் 10-ம் வகுப்பு, 12-ம் வகுப்பு மாணவர்களுடன் கலந்துரையாடினார்கள். ஆய்வு முடிவில் பள்ளி முதல்வர் சம்பத் குமார் நன்றி கூறினார்.

---

தமிழ் முரசு

24.11.2012

# கேந்திர வித்யாலயா பள்ளியில் ஆய்வு

காலாப்பட்டு, நவ. 24-

புதுவை காலாப்பட்டு பல்கலைக்கழக வளாகத்தில் உள்ள கேந்திர வித்யாலயா (எண் 2) பள்ளியில் சென்னை மண்டல உதவி ஆணையர் ஆர்விஎஸ்எஸ் சுப்பிரமணியன் தலைமையில் ஓய்வு பெற்ற முதல்வர் சண்முகம், முதல்வர் சிவாஜி, துணை முதல்வர்கள் ருத்ரப்பசாமி, ஜானகி, தலைமை ஆசிரியர் ரவி மகாதேவன் ஆகியோர் அடங்கிய குழுவினர் ஆய்வு செய்தனர். ஆசிரியர்கள் கல்வி கற்பிக்கும் முறை, அடிப்படை வசதிகள், ஆய்வுக்கூடம், கல்வித்தரம், சுகாதார வசதிகள் ஆகியவற்றை ஆய்வு செய்தனர். மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன. 10 மற்றும் 12ம் வகுப்பு மாணவர்களுடன் கலந்துரையாடலும் நடந்தது. ஆய்வு குழுவினருக்கு சாரண இயக்கம் சார்பில் வரவேற்பு அளிக்கப்பட்டது. ஆய்வு முடிவில் பள்ளி முதல்வர் சம்பத் குமார் நன்றி கூறினார்.




காலாப்பட்டு கேந்திர வித்யாலயா பள்ளியில், மாணவர்கள் நடத்திய உணவு விழிப்புணர்வு நிகழ்ச்சியை ஆய்வு செய்யும் சென்னை மண்டல உதவி ஆணையர் சுப்பிரமணியன் மற்றும் குழுவினர்.